# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசர சிறப்புக்கூட்டம் 2009–ம் வருடம் நவம்பர் மாதம் 06–ம் (06.11.2009) நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**வருகை புரிந்தோர்:**
திரு.சுரேஸ், திருமதி.செலஸ்டினம்மாள், திரு.K.ஜாண்லோப்பஸ், திருமதி.T.ஜாண்சி, திருமதி.V.லூர்துமேரி, திரு.C.முருகன், திரு,T.A.முனாப், திருமதி.S.சீதை, திருமதி.S.ஷீலாஜெயந்தி.

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சி பகுதியில் Traffic Management திட்டத்தின் கீழ் பணிகள் செய்வதற்கு ரூ.280.90 லட்சத்திற்கு 9 பணிகள் தேர்வு செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.1059 நாள்.28.10.2009 மூலம் ஒப்புதல் பெறப்பட்டு திட்ட பிரேரணை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன்பேரில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் ரூ.80.00 லட்சத்திற்கு மிகாமல் பணியினை தேர்வு செய்து மன்ற ஒப்புதல் பெற்று மீள சமர்ப்பிக்குமாறு மண்டல செயற்பொறியாளரால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி தேர்வு செய்த பணிகளில் அவசரமானதும் அவசியமானதுமாகிய கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் பரசேரி பிரதான சாலையில் V.K.P. பள்ளி முதல் பொதுப் பணித்துறை பயணியர் விடுதி சந்திப்பு வரை தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய நடைபாதை அமைத்தல் | 43.00 |
| 2. | குளச்சல் பரசேரி பிரதான சாலையில் V.K.P. பள்ளி முதல் பொதுப்பணித்துறை பயணியர் விடுதி சந்திப்பு வரை வடக்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய நடைபாதை அமைத்தல். | 32.00 |
| 3. | காந்தி சந்திப்பில் Traffic Island அமைத்தல் | 0.75 |
| 4. | அண்ணா சிலை அருகில் Traffic Island அமைத்தல் | 0.75 |
| 5. | குளச்சல் பரசேரி சாலை, முளகுமூடு சாலை, குளச்சல் மார்த்தாண்டம் சாலை மற்றும் பள்ளி ரோடு ஆகிய சாலைகளின் நடுவே நடுக்கோடு அமைத்தல் (Road Bifurcation) | 1.00 |
| 6. | குளச்சல் நகராட்சி முக்கிய சாலைகளில் அறிவிப்பு பலகை வைத்தல் (Sign Board) | 0.40 |
| | **மொத்தம்** | **77.90** |

**அ.குறிப்பு**
மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.4585/09/இ1)
**தீர்மானம் எண்.1082:**அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2009 நவம்பர் திங்கள் 25.11.2009–ம் நாள் புதன்கிழமை காலை 10.45 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் தொகை :ரு.1755/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு. ராபின் சுந்தர்சிங் | புள்ளிவிபரக் குறிப்பாளர் | 09/2009 | 268/– |
| 2 | திருமதி.எஸ், சுதா | நகரமைப்பு ஆய்வாளர் | 09/2009<br>10/2009 | 742/–<br>745/– |
| 3 | திருமதி.அ.நிர்மலா ஜாய் | இளநிலை உதவியாளர் | 09/2009<br>10/2009 | 108/–<br>432/– |

<u>அ.குறிப்பு</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1481/04/அ3)
**தீர்மானம் எண்.1083:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சியில் 01.10.2009 முதல் 31.10.2009 முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட தலைப்பிலான செலவினச் சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**1.பொதுநிதி செலவு சீட்டுகள்**

525 526 527 528 533 534 535 536 537 538 539 541
542 543 544 545 546 547 548 549 550 552 553 556
557 558 559 560 561 562 563 564 565 566 567 568
569 570 571 572 573 574 575 579 580 581 582 583
584 586

**<u>2.குடிநீர் திட்ட நிதி செலவு சீட்டுகள்</u>**

92 93 94 95 96 97 98 99 100 101 102 103

**<u>3.சுனாமி செலவு சீட்டுகள்</u>**

585

**<u>4. IDSMT திட்ட செலவு சீட்டுகள்</u>**

529 530 531 532 550 551 576 577

**<u>5. MFI செலவு சீட்டுகள்</u>**

540 554 555

**<u>6. XI th Finance செலவு சீட்டுகள்</u>**

578

அ.குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.6356/08/பி1)
**தீர்மானம் எண்.1084:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சி கணினி பிரிவில் உள்ள Printer-ல் (Model: HP2300) Fuser Assembler பழுதாகி உள்ளது. அதை சரிபடுத்துவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.544/06/அ2)

**தீர்மானம் எண்.1085:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சியில் மின் ஆளுமையின் கீழ் கணினி வைத்து பயன்படுத்துவதற்காக இரண்டு Computer Table மற்றும் இரண்டு Rolling Chair தேவைபடுகிறது. 12—வது நிதிக்குழு பரிந்துரைத் திட்டம் 2008—09—ன் கீழ் மின் ஆளுமைக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் மேற்கண்டவற்றை வாங்குவதற்கும் இதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.8000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.9334/08/அ2)

**தீர்மானம் எண்.1086:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சியில் இந்த ஆண்டு உள்ளாட்சிகள் தினவிழா கொண்டாடப்பட்டது. அதன்படி அலுவலகத்தில் கோலங்கள் இடப்பட்டு முகப்பில் குலைவாழை கட்டப்பட்டது. மேலும் அலங்கார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு பாடல்கள் இசைக்கப்பட்டன. மேலும் V.K.P. மேல்நிலைப்பள்ளி மற்றும் புனித மேரி மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மூலம் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகர்மன்றத் துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் முன்னிலையில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

மேற்கண்ட விழாவிற்கு Digital Banner தயார் செய்தது, வாசக அட்டைகளுக்குரிய பட்டியல் வாங்கியது, ஒலி,ஒளி அமைத்தது மற்றும் பள்ளி மாணவர்களுக்கு பிஸ்கட் மற்றும் கூல் டிரிங்ஸ் அளித்தது போன்றவைகளுக்கான செலவுத்தொகை ரூ.2800/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.9629/08/சி1)

**தீர்மானம் எண்.1087:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்திற்கான லிப்ட் ஸ்டேசன் அமைக்க நான்கு இடங்கள் ஒப்படைக்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோரியதற்கு கொட்டில்பாடு தவிர ஏனைய இடங்கள் குளச்சல் நகர்மன்றத் தீர்மானம் எண். 828 நாள் 29.05.2009—ன்படி 27.02.2009—ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டன. தற்போது கொட்டில்பாடு பகுதிக்கு **KSSS.** சுனாமி காலனிப் பகுதியில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு எரிவாயு கலன் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண். 773/5—ல் 10 மீ x 10 மீ. அளவுள்ள பகுதியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைப்பு செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.167/09/இ1)

**தீர்மானம் எண்.1088:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

குளச்சல் நகராட்சிக்கு ரீத்தாபுரம் பேரூராட்சி எல்கைக்குட்பட்ட உப்பளம் புறம்போக்கு பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவரால் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் மேற்க்கொள்வதற்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு எதிராக ரீத்தாபுரம் பஞ்சாயத்து தலைவர் தொடர்ந்த வழக்கு O.S.No.48/2008 தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது. எனவே நகராட்சி வழக்கறிஞருக்கு, வழக்கறிஞர் கட்டணம் ரூ. 2500/— ம் தீர்ப்பாணை நகல் கட்டணம் ரூ. 375/—ம் சேர்த்து ரூ. 2875/— ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.167/09/இ1)

**தீர்மானம் எண்.1089:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

குளச்சல் நகராட்சியின் பொது சுகாதார பணிகளுக்காக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய 15 தற்காலிக துப்புரவு பணியாளர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 3396/2005/அ4 நாள் 19.12.2005 —ன்படி 23.12.2005 முதல் தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தனர். ஆனால் 02.06.2008 முதல் 10 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே தற்காலிக துப்புரவு பணியாளர்களாக பணிபுரிய அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். இந்நகராட்சி வளர்ந்து வரும் நிலையில் நகராட்சியின் தரம் முதல் நிலையாக உயர்த்தப்பட்டுள்ளதாலும், இந்நகராட்சியின் துப்புரவு பணியாளர்கள் 48 பேரில் 22 பணியாளர்கள் தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் வினியோகம், தகவல் மையப் பணி, ஓட்டுநர் பணி, அலுவலக காவலர் மற்றும் அலுவலக இருக்கை பணிகளில் மாற்று பணியாளர்களாக ஈடுபடுத்த.ப்பட்டுள்ளதாலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பணிகள் முழுமையாக செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலும், மாவட்ட ஆட்சியரின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறை ஆணையின்படி ஏற்கனவே உள்ள 10 தற்காலிக துப்புரவு பணியாளர்களுடன் 5 தற்காலிக துப்புரவு பணியாளர்களை மீண்டும் தற்காலிகமாக பணி நியமனம் செய்து ஊதியம் வழங்க 10/2009—ம் மாத இந்நகராட்சி மன்ற கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் எண். 1025 நாள் 15.10.2009—ன்படி ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி 15 துப்புரவு பணியாளர்களின் பணியிட அனுமதி 28.11.2009—வுடன் முடிவடையும் நிலையில் மேற்காணும் பணியிடங்களை தொடர்ந்து நீட்டித்தால் தணிக்கைத் தடையும், இந்நகராட்சியின் பொது நிதிநிலை திருப்திகரமானதாக இல்லாததால் நிர்வாக சிக்கலும் எழக்கூடும். எனவே 28.11.2009—வுடன் இப்பணியிடங்களை முடித்துக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2764/05/இ1)

**தீர்மானம் எண்.1090: சுகாதாரப்பணிகள் நன்றாக நடைபெற்று வருகிறது. தினக்கூலி அடிப்படையில் வேலை செய்து வருகின்ற 15 பணியாளர்களை அவர்கள் தற்போது மே.கொண்டு வரும் சுகாதாரப்பணிகளிலிருந்து விலக்கினால் மிகப்பெரிய அளவிலான சுகாதாரக்கேடு எழக்கூடும். எனவே அவசர அவசியம் கருதி மேலும் மூன்று மாதங்களுக்கு பணிநீட்டிப்பு செய்ய ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் மினி லாறி TN74Z-2339-க்கு பழைய மின்கலம் பழுதடைந்துள்ளதால் புதிய மின்கலம் வாங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.3150/—க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது

**அ.குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.129/08/எச்1)

**தீர்மானம் எண்.1091:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் மினி லாறி TN74Z-5507-க்கு பழைய மின்கலம் பழுதடைந்துள்ளதால் புதிய மின்கலம் வாங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.5800/—க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது

**அ.குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7219/08/எச்1)

**தீர்மானம் எண்.1092:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மினி லாறி T.N.74 –T-5508 –க்கு 04.10.2009 –ல் தகுதிச் சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் கீழ்க்கண்ட பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளது.

(1) நான்கு வீல் கிரீஸ் வைக்க
(2) ஐந்து டயர்கள் கழற்றி பவுடர் வைத்து மாட்ட
(3) ஏர் பில்டர் சரி செய்ய
(4) பம்பு நாசில் சரி செய்ய
(5) டிப்பர் ஆயில் லெவல் செய்ய
(6) பாடி டிங்கரிங் செய்ய
(7) வாகனம் சர்வீஸ் செய்ய
(8) வர்ணம் பூச
(9) இண்டிகேட்டர் லைட் மாற்ற

மேற்படி பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவு ரூ. 20,000/— ஆகும். எனவே மேற்படி பழுதுகளை சரி செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : (1) மதிப்பீட்டிற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(2) அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2913/09/எச்1)

**தீர்மானம் எண்.1093:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 12**

குளச்சல் நககாட்சிக்குட்பட்ட சன்னதி தெருவில் க.எண். 3/74—க்கு உரிய உரிமையாளர் திரு.ராதாகிருஷ்ணன் என்பவர் புதிய குடிநீர் குழாய் இணைப்பு கோரி பதிவு கட்டணம் ரூ. 25/—யும், திருப்பி கொடுக்கப்படாத சேவை கட்டணம் ரூ. 2000/—ம், 15.10.2009 அன்று செலுத்தி உள்ளார். தற்போது மேற்க்கண்ட முகவரியில் உள்ள மனுதாரர் குடிநீர் இணைப்பு பெறுவதற்கு முன்பே தான் செலுத்திய திருப்பி கொடுக்கப்படாத சேவைக்கட்டணம் ரூ. 2000/— யை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். எனவே மனதாரருக்கு சேவை கட்டணம் ரூ. 2000/— திரும்ப வழங்குவது குறித்து மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3747/09/இ2)

**தீர்மானம் எண்.1094: சேவைக்கட்டணத்தினை திரும்ப வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 13**

குளச்சல் நகராட்சியில் பேருந்து நிலையம் திருப்பில் க.எண் 27/23 அருகில் காந்தி சந்திப்பு க.எண்.19/134 அருகில் மற்றும் கொட்டில்பாடு பம்பிங் மெயினில் உள்ள குடிநீர் குழாய் உடைப்புகளை சரி செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1044 நாள்.15.10.2009—ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி 30.10.2009—ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு (ரூ.4994.00) |
| 2. | திரு.எம்.வி.குமார் | 18.19% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.5904.80) |

இதில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 0.04% மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4771/09/சி1)

**தீர்மானம் எண்.1095:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 14**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண். 3–ல் உள்ள சன்னதி தெருவில் அம்மன்கோவில் அருகில் மழைநீர் வடிகால் ஓடை அமைக்க ரூ. 7,20,000/–ம் மதிப்பீட்டில் எடுத்து செய்வதற்கு 06.11.2009–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எஸ். ஜாண்றோஸ் | 17.99% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.842450/–) |
| 2. | திரு.சி. செல்லநாடார் | 4.98% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.749552.50) |

இதில் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளது. இவற்றில் திரு.சி.செல்லநாடார் என்பவர் 4.98% மதிப்பீட்டை விட அதிகமாக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :**

(1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 29.09.2009–ம் தேதிய 1007–வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(3) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. செல்லநாடார் என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக 4.98% மதிப்பீட்டை விடஅதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.4287/09/இ1)

**தீர்மானம் எண்.1096: குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சிசெல்லன்நாடாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 15**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட போர்வெல் எண்.11–ல் மோட்டார் பழுது மற்றும் ஜி.ஐ. குழாய்களை மாற்றி UPVC குழாய்களாக பொருத்துதல். போர்வெல் 4 –ல் மின் மோட்டார் பழுது சரிசெய்தல் பணிக்கு 12.11.2009–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு (ரூ.29973.70) |

| | | |
|---|---|---|
| 2. | திரு.பி.தங்கமணி | 35.56% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.31050.00) |

இதில் திரு.சி. சந்திரசேகர் என்பவர் 0.03% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :**

(1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 15.10.2009–ம் தேதிய 1043–வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(3) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.4772/09/இ1)

**தீர்மானம் எண்.1097:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட தும்பக்காடு, துறைமுகத்தெரு எண் –1 மற்றும் 2–ல் உள்ள கழிவறை மின் மோட்டார்கள் பழுது சரிசெய்வதற்கு 12.11.2009–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு (ரூ.17983.00) |
| 2. | திரு.பி.தங்கமணி | 3.66% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.18650.00) |

இதில் திரு.சி. சந்திரசேகர் என்பவர் 0.04% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :**

(1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 15.10.2009–ம் தேதிய 1036–வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(3) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.4769/09/இ1)

**தீர்மானம் எண்.1098:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 17**

கல்லத்திவிளை சுனாமி குடியிருப்பு பக்கம் மண் சாலைகளை சிமெண்ட் சாலைகளாக மாற்றுவதற்கு 12.11.2009–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.தங்கமணி | 12.42% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.264650.00) |
| 2. | திரு.சி.சிவதாணுமாலையன் | 4.99% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.247162.70) |

இதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளது. பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. சிவதாணுமாலையன் என்பவர் 4.99%

மதிப்பீட்டை விட அதிகமாக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு :

(1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்க்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது 15.10.2009–ம் தேதிய 1035–வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(3) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. சிவதாணுமாலையன் என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக 4.99% மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.4772/09/இ1)

**தீர்மானம் எண்.1099: குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சிவதாணுமாலையன் என்பவரது விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 18**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட மெயின்ரோடு சுந்தர் பிரஸ் முன்புறம் 110 mm PVC குழாய் உடைப்பு Bore No.1 - 80mm NRV பழுது சரிசெய்வதற்கு 12.11.2009–ல் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விவரம் வருமாறு

| வ எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர் | 0.08% மதிப்பீட்டை விட குறைவு (ரூ.4996.00) |
| 2. | திரு.எம்.வி. குமார் | 9.98% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 5499.00) |
| 3 | திரு. சுந்தர் | 8.20% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 5410.00) |

இதில் திரு.சி. சந்திரசேகர் என்பவர் 0.08% மதிப்பீட்டை விட குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : (1) மேற்காணும் வேலைக்கான மதிப்பீட்டிற்கு மன்றத் தீர்மானம் எண். 1058 நாள் 28.10.2009–ல் அனுமதி வழங்கி உள்ளது.

(2). குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண்.4764/09/இ1)

**தீர்மானம் எண்.1100:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 19**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் உள்ள, குடிநீர் குழாய் உடைப்புக்களை சரி செய்ய வேண்டியுள்ளது.

(1) அக்கரைப்பள்ளி செல்லும் 2” G.I. Pipe –ல் உள்ள உடைவு சரி செய்தல்.
(2) கொட்டில்பாடு OHT–ல் Overflow Pipe சரி செய்தல்.
(3) இலப்பவிளை பள்ளிக்கூடம் முன்புறம் 5” Sluice Valve கழற்றி விட்டு குழாயை இணைத்தல்.

மேற்கண்ட பணிகளை செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுதொகை ரூ.5000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5249/09/இ1)

**தீர்மானம் எண்.1101:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 20**

குளச்சல் நகராட்சியில் கீழ்கண்ட இடங்களில் உள்ள குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

(1) பீச் பம்பிங் மெயின் குழாய், கொட்டில்பாடு மின்கம்பம் எண். FI/4 பக்கம் குழாய் உடைவு சரி செய்தல்,

(2) நகராட்சி அலுவலகம் வரும் 25mm, G.I. குழாய் உடைவு சரி செய்தல்,

(3) பர்னட்டிவிளை OHT–ல் 150mm Sluice Valve பழுது சரி செய்தல்.

(4) மெர்கன்டைல் வங்கி முன்புறம் இலப்பவிளையில் இருந்து கழற்றிய வால்வு பொருத்துதல்.

மேற்கண்ட பழுதினை சரி செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுதொகை ரூ.4,950/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5250/09/இ1)

**தீர்மானம் எண்.1102:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 21**

குளச்சல் நகராட்சியில் கீழ்கண்ட இடங்களில் குடிநீர் குழாய்களில் உடைவு ஏற்பட்டுள்ளது. அதனால் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

(1) கொட்டில்பாடு தெருவில் K.P.ராஜன் வீட்டு பக்கம் 3" PVC குழாய் உடைவு சரி செய்தல்,

(2) திரு.நூர்முகம்மது, M.C. வீட்டின் முன்பக்கம் 90mm PVC குழாய் உடைவு சரி செய்தல்,

(3) பீச் கடற்கரை ஓடையின் அடியில் 3" PVC குழாய் உடைவு சரி செய்தல்,

மேற்கண்ட பணிகளை செய்வதற்கும், அதற்கு ஆகும் மதிப்பீட்டுதொகை ரூ.4,300/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5251/09/இ1)

**தீர்மானம் எண்.1103:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 22**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு சுகாதாரமான சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு தானியங்கி குடிநீர் சுத்தம் செய்யும் கருவி (Water Purifier) அமைப்பதற்கும், அதற்கு குடிநீர் வழங்க பிளம்பிங் (Plumping) பணிகள் செய்வதற்கும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.1104:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 23**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் மெடிக்கல் ஸ்டோர் அருகில் படிக்கட்டு கட்டுவதற்கும், மேலும் பேரூந்து நிலைய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அருகில் பள்ளமாக இருக்கும் இடத்தில் காங்கிரீட் அமைப்பதற்கும், இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.25,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.1105:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 24**

குளச்சல் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மினி லாறி TN.74.T.5508–ன் தகுதிச் சான்று புதுப்பிக்க வேண்டி அதற்கான பழுதுகளை ரூ. 20,000/– மதிப்பீட்டில் சரி செய்வதற்காக நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| (1) M/s. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் | – | ரூ. 19,935/– |
| (2) M/s. மணி மோட்டார் ஒர்க்ஸ் | – | ரூ. 20,000/– |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனம் ரூ.19,935/—க்கான குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.2913/09/எச்1)

**தீர்மானம் எண்.1106: குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனதத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 25**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட களிமார் பகுதிக்கு செல்லும் வழியில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு 20.11.2009—ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. சி. செல்லநாடார் | 10.72% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 654570.00) |
| 2. | திரு.எஸ். ஜாண்றோஸ் | 4.92% மதிப்பீட்டை விட அதிகம் (ரூ.620239.40) |

இதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளது. இதில் திரு.எஸ். ஜாண்றோஸ் என்பவர் 4.92% மதிப்பீட்டை விட அதிகமாக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>**

(1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்படி வேலைக்கான மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் 15.10.2009—ம் தேதிய 1041—ம் எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(ந.க.எண்.4782/09/இ1)

**தீர்மானம் எண்.1107: குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஜாண்றோஸ் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 26**

குளச்சல் நகராட்சிக்கு 33 சதவிகித குளோரின் அளவு கொண்ட பிளீச்சிங் பவுடர் வினியோகம் செய்ய 12.11.2009—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.K.K.இண்டஸ்டிரீஸ், தாழக்குடி | ரூ. 27.50 / 1 கிலோ (மதிப்பீட்டு விகிதம்) |
| 2. | Sri. பாலாஜி ஏஜென்சீஸ், நாகர்கோவில். | ரூ. 29.00 / 1 கிலோ (5.45% மதிப்பீட்டை விட அதிகம்) |

இதில் M/s.K.K.இண்டஸ்டிரீஸ் நிறுவனம் ரூ. 27.50 / 1 கிலோவிற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>**

(1) பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத் தொகை செலுத்தி உள்ளார்கள்.

(2). மேற்படி பிளீச்சிங் பவுடர் வினியோகம் செய்வதற்காக இந்நகர்மன்றம் தனது 29.05.2009–ம் தேதிய 811–வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(3) குடிநீரின் அவசரம், அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வினியோக உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1110/08/இ1)

**தீர்மானம் எண்.1108:அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்